[1971 ஜூலை 23

கிராமப்புற மருந்தகங்கள்.

* 398 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஊராட்சி ஒன்றிய நகராட்சி பராமரிப்பில் உள்ள மருந்தகங்களைத் தமிழ்நாடு அரசே ஏற்று நடத்த திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஊராட்சி ஒன்றிய நகராட்சி பராமரிப்பில் உள்ள மருந்தகங்களை (Dispensaries) தமிழக அரசு படிப்படியாக ஏற்று நடத்தி வருகிறது.

திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்குப் போதிய வருவாய் இல்லாத காரணத்தினால் உள்ளாட்சித் துறையின்கீழ் இருக்கின்ற மருந்தகங்களும், மருத்துவ மனைகளும் மக்களுடைய தேவையைத் திருப்திகரமாக நிறைவேற்ற இயலவில்லை. படிப்படியாக நிறைவேற்ற இருக்கிற அந்தத் திட்டத்தைச் சிறப்புத் திட்டமாக ஆக்கி அரசு செயல்பட விரைந்து முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன். தலைவரவர்களே, இப்படிப்பட்ட மருந்தகங்கள் ஏராளமாக இருக்கின்றன. அது ஜில்லா போர்டு காலத்திலே தோன்றி பஞ்சாயத்து யூனியன் காலத்திலேயும் நடைபெற்று வருவதாகும். அவை அனைத்தையும் ஒன்றாக ஏற்றுக்கொள்வதற்குப் பெருநிதி ஒதுக்குவது என்பது இயலாத காரியம். ஆலோசிக்கப்பட்டபொழுது அரசாங்கத்தின் உத்தரவில் எந்தெந்தப் பஞ்சாயத்து யூனியன்கள் டிஸ்பென்ஸரியை உள்ளபடியே அவர்களால் நிர்வகிக்க முடியாத அளவிற்கு, மக்கள் தொகை பெருக்கத்திற்குத் தேவையான அளவு வசதி செய்து தர முடியாமல் இருந்தால் அதைப் போதுமான அடிப்படைத் தொகையோடு, மூலதனச் செலவோடு ஒப்படைத்தால் கரண்ட் எக்ஸ்பெண்டிச்சர், நடைமுறைச் செலவை அரசாங்கம் ஏற்று அவற்றை நிர்வகிக்கலாம் என்று கருதி ஏற்றுக் கொள்ளப்பட்டு, பல டிஸ்பென்சரிகள் இதுவரை ஏற்றுக்கொள்ளப் பட்டிருக்கின்றன. ஆண்டுதோறும் சிலசில டிஸ்பென்சரிகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

THIRU R. PONNAPPA NADAR: May I know from the Hon. Minister the number of dispensaries taken over by the Department from the Panchayat Unions and Municipalities so far?

THE HON. THIRU K. ANBAZHAGAN: From the report that I have, only four Panchayat Union dispensaries, one in Illupur in Tiruchirappalli district, Subramaniapuram in Thanjavur district, Kottampatty in Maduari district and Thambampatti in Salem district are taken over by the Government and other dispensaries, some of them in every district, are under recommendation by the Department. Further, there is a proposal to consider some more dispensaries to be taken over.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் நடைபெறும் மருந்தகங்களில் பணி செய்யும் பணியாளர்களுக்கு அரசாங்கத்திலிருந்து சம்பளம் கொடுக்கிறோம். ஏறக்குறைய ஒவ்வொரு மருந்தகங்களிலும் வேலை செய்யும் பணியாளர்களும், நல்ல ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரும் அங்கே இருக்கிறார்கள். வருஷத்திற்கு 15,000 ரூபாய் அளவில் சம்பளம் கொடுக்கிறோம். இருந்தாலும் ஒன்றியங்களால் 5,000 ரூபாய் அல்லது 6,000 ரூபாய் அளவிற்குத்தான் மருந்து வாங்கிக் கொடுக்கப்படுகிறது. 5,000, 6,000 ரூபாய் மருந்துக்காக 15,000 ரூபாய் செலவிலே சிப்பந்திகள் இருக்கிறார்கள். ஆகவே, ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கும் மருந்தகங்களை ஒன்று, அதிகப்படியாக மருந்து வாங்க ஏற்பாடு செய்ய வேண்டும், அல்லது அரசாங்கமே உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த விகிதாச்சாரக் கணக்கு சரியான அடிப்படையில் பிறப்பது அல்ல. மருந்துகளின் விலையைவிட மருந்தைக் கொடுக்கும் டாக்டர்கள், மருத்துவத் துறையைச் சார்ந்த அவர்களின் தொண்டின் விலையின் மதிப்பும் அதிகம். மிகப்பெரிய மருத்துவமனையாக யிருந்தாலும் மாவட்ட மருத்துவ மனைகளாகயிருந்தாலும் மருந்துக்கு ஆகும் செலவைவிட மருந்தைத் தருகின்ற நிபுணத்துவத்திற்கு ஆகும் செலவு அதிகம். அந்த அடிப்படையில் அது தவறு அல்ல.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்த ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசாங்கம் எடுக்க படிப்படியாக அமல் படுத்தத் திட்டம் இருக்கிறது என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அந்தத் திட்டம் அமல் ஆக்கப்படுவதற்குமுன் இப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் மக்களுக்கு நன்றாகப் பயன்படும் வகையில் இந்த மருந்தகங்களுக்குப் போக்குவரத்து வசதியும், டெலிபோன் வசதியும் செய்து தரப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேள்வி நல்ல நோக்கத்தோடு கூடியது. இப்பொழுது மாவட்ட மருத்துவ மனை அடிப்படையிலே இந்தப் பணி நடைபெறுகின்றது. இனி வட்டத்திற்கு வந்து, வட்டத்திலிருந்து யூனியனுக்கு வரும் காலத்தில் திரு. கணபதி அவர்கள் அந்தப் பலன்களைப் பெற முடியும்.

* 399. *Q.*—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal with the Government to take over the rural dispensaries in major panchayats?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தற்போது பெரிய பஞ்சாயத்துக்களிலுள்ள ரூரல் டிஸ்பென்சரிகளை அரசு ஏற்கும் திட்டம் ஏதும் இல்லை.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, பஞ்சாயத்து ஒன்றியங்கள் நடத்தக்கூடிய அந்த மருந்தகங்களில் நகரங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன, கிராமப்புறங்களில் எத்தனை நடத்தப்படுகின்றன?